# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்

## துன்னாலை வடக்கு புலோலி



## 71, அடி உயரம் கொண்ட
## 7 தள இராஜகோபுர அமைப்பு
## ஐ திருப்பணிக்கு

அடியார்களை இயன்ற பணஉதவி புரியும்படி
கேட்டுக்கொள்கிறோம்.

இராஜகோபுர திநுப்பணிச் சபை
ஸ்ரீ வலிபுர அழ்வார் கோவில்
துன்னாலை வடக்கு புலோலி P. O.

# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில்

## துன்னாலை

### அறிமுகம்

பாரத மாதாவின் இரத்தினபதாகமென இந்து சமுத்திரத்தின் நடுவணதாகத் திகழும் ஈழமணித் திருநாட்டின் தலையாக விளங்குவது யாழ்ப்பாணம். நாலுபக்கங்களிலும் சமுத்திரதேவனாலே அரணமைத்துத் தழுவப்பட்ட சிறப்புடன் தனக்கென வாக்கிக் கொண்ட தனித்தன்மை பேணும் புகழுடன் பொலிவது இலங்காபுரி எனப் புலவர்களாற் போற்றப்படுவதற்குப் பல காரணங்கள் காணப்படுவன. பாரத நாட்டிலே பல மதமோதல்கள் ஏற்பட்டுத் தமிழ் மக்களது வாழ்விலே பல சிதறல்களை ஏற்படுத்தியபோதும் ஈழமணித் திருநாடாகிய இலங்கை அன்றும் இன்றும் சைவம் பேணிய பெருமை உடையது. சரித்திர காலத்திற்கு முற்பட்டனவாகத் தேவாரத் திருப்பதிகங்கள் பாடப்பட்ட பெருமை உடைய மகாதுவட்டாவினாலே வழிபாடியற்றிய கௌரியம்பாள் சமேத திருக்கேதீஸ்வரநாதர் ஆலயமும், இராவணேஸ்வரனால் போற்றப் பெற்ற மாதுமையம்மை சமேத கோணேஸ்வரப் பெருமானும், இராமனால் வழிபாடியற்றிய வடிவாம்பிகா சமேத முன்னைநாதப் பெருமானும், நகுலமுனிவராலே வழிபட்ட சிறப்புடைய அங்கயற்கண்ணி சமேத நகுலேஸ்வரப் பெருமானும் ஈழவள நாட்டிலே சைவம் நிலைத்த பெருமையை இன்றும் எடுத்துக் கூறும் அருமைப் பாட்டினை எம்மால் இலகுவில் மறக்க முடியாது.

இராவணேஸ்வரனுடைய காலமும், இராமருடைய காலமும் மகாபாரத காலத்திற்கு முற்பட்டது என இதிகாசங்கள் எடுத்துக் கூறுகின்றன. பஞ்சபாண்டவர்களுக்கு இராமன்கதை எடுத்துக் கூறப்பட்டதாக மகாபாரதத்திற் காணப்படும் இராமோபாக்கியானம் இராம இராவணயுத்தம் மகாபாரத யுத்தத்திற்கு முன் நிகழ்ந்தது என்பதை அறிவுறுத்துகிறது. மகாபாரதம் எழுதிய வியாசர் வேதங்களை நான்காகவகுத்ததாகக் கூறப்படுகிறது. வியாசர் மகாவிட்டுணுவே உலக முதல்வர் என்று வலது கரத்தை உயர்த்திக்கூறிய அபராதத்திற்காக, காசிவிஸ்வநாதர் சந்நிதானத்திலே நந்தியம்பெருமானால் சபிக்கப்பட்டு அவலமடைந்த கதை தக்ஷிணகைலாய மான்மியத்திலே விபரமாகக் கூறப்படுகிறது.

வியாசர் விட்டுணுவின் புகழைத்திணிக்கத் தொடங்குவதற்கு முன் விட்டுணுவைப்பற்றித் தமிழ் மக்கள் அறியவருமுன், சிவனை வணங்கினர் என்பதை யாருமே மறுக்க முடியாது. சமஸ்கிருதம்

என்னும் வடமொழியில் அமைந்த வேத மந்திரங்களையும் வேள்விகளையும் செய்து பழகிய ஆரியர் தமிழ் மக்கள் வாழ்ந்த இடங்களில் வந்து சேருவதற்கு முன் தமிழ் மக்கள் சிவனுெடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை. சிவனெடொப்பார் இங்கு யாவரும் இல்லை என உலக முதல்வராகச் சிவபெருமானை வழிபட்ட சிறப்பினை உடையவர்கள்,

சிவாகமங்கள் சிவனுடைய பெருமை பேசுவன. பதியாக விளங்குபவன் சிவன் எனவும், உயிரினம் அனைத்தும் பசுக்கள். உலகியற் பந்தபாசங்களுடன் கூடிய தன்மையால் உயிர்கள் தாய்வயிற்றிற் பிறவி எடுக்கின்றன. பதியாகிய சிவபரம்பொருள் இயல்பாகவே பாசங்களின்றும் நீக்கிப் பரிசுத்தமாயிருக்குத் தன்மையால் தாய் வயிற்றிற் பிறப்பதில்லை என்னும் பதி, பசு, பாச விளக்கம் சிவாகமங்களின் ஞான காண்டமாக அமைகின்றது என ஆகமநூல்கள் விதந்துரைக்கின்றன.

தாய்வயிற்றில் பிறந்தவர்கள் பசுக்கள். பசுக்கள் பதியாகமாட்டா எனத் தெளிவு படுத்துவது சைவ நெறியாகும். பசுக்கள் பதியை நாடுவதுதான் முறைமை. பதியினது திருவருளிலே திளைத்திருப்பதே பேரின்பப் பெருவாழ்வு எனச் சைவநெறி விளக்குகிறது.

மகாபாரத காலம் விட்டுணுவைப் பரமாகக் கொண்டு பெருமையுற்றது. தமிழ் மொழியிலே மாயோன், மால் திருமால் என்ற சொற்களால் அழைக்கப்படும் விட்டுணு உலகியல் மயக்கத்தைத் தருபவன் என்னும் கருத்தையே தெளிவு படுத்துபவராக, விட்டுணுவும் அடிமுடி தேடு படலத்திலே நானே பரப்பிரமம் என்று அகம்பிரமம் பேசிய காரணத்தினுலே தன் முன் தோன்றிய பேரொளிப் பிழம்பின் அடியைக் காணமுடியாது, தான் பிரமம் அல்ல என்று ஆணவச் செருக் கொழிந்து நின்ற கதை கந்தபுராணம் பேசுகிறது.

பாரத நாட்டிலே, வைணவர்கள் என்று தம்மை அழைத்துக் கொண்டு விட்டுணுவை வழிபட்டவர்கள் சைவவழி பாட்டை நிந்தனை செய்தனர் அதே விதமாக, சைவர்கள் வைணவர்களைத் தூஷித்தனர்.

ஈழவள நாட்டிலே இந்தப்பகைமை உணர்வு தலைகாட்டவில்லை என்பது அனுபவத் துணிபு. சைவம் பேணும் நெறி இன்றும் எமது நாட்டில் நிலவுவதனுலே சிவபரம் பொருளையே முழுமுதலாக வழிபடும் நம்நாட்டினர் அம்பிகையை சிவபெருமானது திருவருட் சக்தியாக வழிபட்டனர். உயிர்களிடத்துப் பற்றியிருக்கும் பாசத்தை நீக்குவதற்கு என்றும் இளைஞனகத் தோன்றும் முருகனுகச் சிவனே உதித்தனன் என்று முருகனை வழிபடுகின்றனர். பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன் என விநாயகரை வழிபடுகின்றனர். ஆயினும், யாருமே ஈழவள நாட்டில் தம்மைத் தனிப்படுத்திச் சாக்

தர், கௌமாரர், காணபத்தியர், என்றோ, பைரவர் சௌரர் என்றோ அழைத்துக் கொள்வதில்லை. சைவர்கள் என்ற பெருநெறிநின்று சிவன்கோவிலில் அம்பாள், முருகன் விநாயகர், பைரவர் சூரியன் முதலியவர்களுக்குச் சந்நிதானம் அமைத்து வழிபட்டுவரும் உயரிய முறைமை ஈழவள நாட்டின் தனித்துவத்தைப் பேணுவதாயும் அதே வைணவத்திற்கோ, சாக்தத்திற்கோ, கௌமாரத்திற்கோ, காண பத்தியத்திற்கோ, பைரவத்திற்கோ, சௌரத்திற்கோ தம்மை அடிமை படுத்தாது சிவபரம் பொருளையே முழுமுதல் தெய்வமாக வழிபட்டு வந்த பெருமையை இன்று வரை கட்டிக் காத்தது. ஈழவள நாட்டுச் சைவப் பெருமக்களது தலையாய பண்பாக மிளிர்கிறது என்பதை யாரும் மறுத்துரைக்க முடியாது.

பாரத நாட்டிலிருந்து ஈழவள நாட்டிற்குக் காலத்திற்குக் காலம் வருகைதரும் சமயப் பிரசாரகர்கள் தமது கொள்கைகளையும் கருத்தக்களையும் ஈழம்வாழ் தமிழ் மக்களிடையே பரப்பவும் திணிக்கவும் முயன்று இன்றுவரை ஊடுருவல் செய்ய முடியாது சைவம் தழைத்தோங்குதற்குக் காரணம் எமது நாட்டிலே அறுவகைச் சமயக் கோட்பாடுகளும் சைவ நெறிக்குப்பிற்பட்டதாக இடைப்புரவரலாக நுழைய முற்பட்டதை நன்கு உணர்ந்து கொண்டதனாலேயே என்று கூறுவது மிகையாகாது.

ஈழவள நாட்டிலே சைவர்கள் சிவாலயங்களிலே விட்டுணுவை சந்தானகோபாலர் என்றும் வேணுகோபாலர் என்றும், சுற்றுப் பிரகார மூர்த்தியாக வழிபாடியற்றியதோடுமட்டுமமையாது, தனிக்கோவிலாக அமைத்து வழிபாடியற்றியபோதும், தம்மை ஒருபோதும் தனிப்படுத்தி வைணவர் என அழைத்துக் கொள்ள விரும்பவில்லை என்பதுடன், சிவப்பிராமணரைத்தமரையே விட்டுணுவாலயங்களிலும் பூசைக்கு நியமித்ததையும் நடைமுறையில் நாம் அவதானிக்கலாம். ஆதலினாலே வைணவர் இன்றி விட்டுணுவழிபாடு இருக்கும் சிறப்பு ஈழவள நாட்டின் தனிச்சிறப்பு என்று கூறிக் கொள்வதில் நாம் பெருமை அடைகிறோம்.

## விட்டுணு வழிபாடு

விட்டுணு உலகியல் சாதனத் தொடர்பு உடையவர். பத்து அவதாரங்கள் உடையவராக நம்பப்படுவர். தாய் தகப்பனுக்குக் குழந்தையாகப் பிறந்து இறந்து உலகியல் வாழ்வுடைய மக்களைப் போலவே வாழ்ந்து காட்டியதாக பாகவதம், மகாபாரதம் முதலான நூல்கள் எடுத்துக்கூறுகின்றன. இதனாலே வைணவர் வேதாந்தக் கொள்கை உடையவராகி விட்டுணுவைப் பரமாத்மா என்றும் ஏனைய உயிரினங்களை சீவாத்மா என்றும் பரமும் சீவனும்

ஒன்றுகும்போது ஆத்மா ஒன்று என்றும் கூறிக்கொள்வதனுல் சைவ சித்தாந்தக் கடவுள் கொள்கைக்கு மாறுபாடுடையராயினர். செல்வத்திற்கு அதிதேவதையாகிய இலக்குமியை விட்டுணுவின் சக்தியாகவும், விட்டுணுவை பூமிநாயகனுகவும், காத்தற் பொறுப்பு உடையவனுகவும் வைணவர் வழிபடுவர். மோகினியாகி வந்து உலகத்தை மோகாந்தகாரத்தில் மூழ்கச் செய்தவர் விட்டுணு என்று புராணங்கள் கூறுவதையும் இங்கு குறிப்பிடாதிருக்க முடியாது. ''இருவேறு உலகத்தியற்கை திருவேறு தெள்ளியராதலும் வேறு'' என்று சைவத்தின் சிறப்புக் கூறுவது திருக்குறள் (374)

கி. மு. 5,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றுப் பெருமை மிக்க மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரீக காலம், சிவனையே முழு முதலாக வழிபட்ட சிறப்பு ஆதித்திராவிடத் தமிழ் மக்களுடையது என்பதை அகழ்வாராய்ச்சியினர் நிரூபித்துள்ளனர்.

கைபர் கணவாய் வழியாகச் சிந்துவெளிக்கு வந்து சேர்ந்த ஆரியர் விட்டுணு வழிபாட்டையும், உருத்திர வழிபாட்டையும் தமிழ் மக்களிடையே புகுத்தினர் என்றும், உருத்திர-சிவ சமப்படுத்தல் கி. மு. 1,500க்கும் 1,200க்கும் இடைப்பட்டகாலத்து எழுந்தது என்றும் வடமொழி நூல் வரலாற்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

தொல்காப்பியம் என்னும் தமிழ் இலக்கண நூல் ஆரிய திராவிட கலப்பின் பிறப்பாகவே கருதப்படுகின்றது. உலகியல் மயக்கத்தைத் தருபவன் மாயோன் எனவும், அந்தமயக்கம் எழுவதற்குக் காரணமாயமைந்தது மனம் எனவும், மனதை மயக்கும் மன்மதன் மாயோன் மனதில் தோன்றிய புதல்வன் என்றும் தமிழ் இலக்கியம் கூறும்.

ஈழத்துப் பூதந்தேவனுர் சங்கத்தமிழ் இலக்கியக் குழுவில் இருந்த பெருமை அகநாநூறு ஐங்குறுநூறு, குறுந்தொகை ஆகியன பேசுவதனுல், ஈழநாடு தமிழ்கூறும் நல்லுலகில் புகழ் பெற்ற நாளில் சிவ வழிபாடுடையதாக இருந்தமைக்கு திருக்கேதீஸ்வரம், கோணேஸ்வரம், முனீஸ்வரம், நகுலேஸ்வரம் போன்ற வரலாற்றுப் பெருமைமிக்க சிவாலயங்கள் சான்றுரைக்கின்றன. ஆதலின் விட்டுணு வரலாறும் வழிபாடும் இடைப்புரவரலாக இணைந்ததை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

## வல்லிபுர ஆழ்வார் ஆலயம்

### காகவழிச் செய்தி

''வல்லி'' என்னும் பெயருடைய பெண் வாழ்ந்த இடம் வல்லிபுரம் எனலாயிற்று, வங்கக் கடலின் ஓங்கியெழும் அலைக்கரங்கள் இலங்கை அன்னையை அணைத்துச் செல்லும் அற்புதக் காட்சி வல்லிபுரக் கடலோரத்தில் இன்றும் நிகழ்வதொன்றுகும். வருணபகவான்

தனது துணைவனான கடலரசனை அனுப்பி வல்லிபுர ஆழ்வாரைத் துதிபாடச் செய்து மனம் மகிழும் நிகழ்வு பார்ப்போர் மனதைப் பரவசமூட்டுவதாகும். கடலோரத்துப் பரந்து விரிந்து கிடக்கும் வெண்மணல் பரப்பு திண்திமில் வன்பரதவர் கடல் படுதிரவியம் தேடி வலைவிரித்துத் தமது வாழ்க்கைப் படகினை ஓட்டுவதற்கு முயற்சி செய்தனர்.

அன்றொருநாள், மற்சாவதாரம் எடுத்த விட்டுணு மூர்த்தி முன்னை நினைவு மீதூர மீனுருகவந்து வலைகளைக் கிழித்து மீனவரை மனக்கிலேசமடையச் செய்து கொண்டிருந்தார். கரையோரப் பகுதியில் வாழ்ந்த மக்கள் அனைவரும் திரண்டுவந்து மீனின் அதிசயம் கண்டு ஆச்சரியக் கடலிலே மூழ்கினர்.

வல்லிக்கு ஒரு வருத்தம். மனதிலே நீங்காத குறை - ஊரவர்கள் 'மலடி' என அழைக்கத்தக்கதாக மணிவயிறு வாய்க்கப் பெறாததை யிட்டு நெடுந்தவத்தினை அரிது முயன்று வந்தாள். அடியவர் துயர் களையும் அலகிலா விளையாட்டுடைய அலைகடலிற் பள்ளிகொள்ளும் அனந்த சயனன் அர்த்த ராத்திரியில் வல்லியின் கனவில் தோன்றி அலைகடலோரம் வரின் மன அலைச்சல் நீங்கும் என்று பணித்து மறைந்தனன்.

வல்லியின் ஆனந்தத்திற்கு அளவேயில்லை. பாற்கடலிற் பள்ளி கொள்ளும் பரந்தாமனின் அருளாடலை ஆரறிவார். வல்லிவந்தாள் கடலோரம். கண்ட கனவைக்கருத்திற் கொண்டாள். கரையோரம் இருந்தாள். கண்களை மூடினாள். தியானத்தமர்ந்தாள். இருகரங்களை யும் முன்னே நீட்டியவாறு நீலமேக சியாமள வண்ணனை நினைத்தபடி தன்னை மறந்த நிலையில் மனதில் மாயோனை இருத்தினாள். உள்ளத் திலே உறைந்த உலகளந்தான் உலகத்தோர் காண வல்லிக்கு அருள் புரிய உளம் கொண்டான். வலைஞர்களை வ த்துவதையொழித்து வல்லிக்கு வரம் கொடுக்க நீட்டிய கரத்தில் மீனுருக வந்து பாய்ந்து வல்லியின் மடியில் அழகிய குழந்தையாக மாறிநின்று மயக்கறுத் தான். கண்களைத் திறந்து பார்த்த வல்லி மூர்த்தி திருவிருக்கும் வண் ணம் கண்டாள் தன்னை மறந்தாள் தலைவன் தண்ணனியால் தழைத் தாள். கடலோரம் நின்ற பக்தர்கூட்டம் கடலலையை மிஞ்சிய ஆர வார ஒலிசெய்து திருமாலின் திருந்திய நல்லருளினைக் கண்டு துதித்து மகிழ்ந்தது. வல்லி குழந்தையைத் தாலாட்டிச் சீராட்டிப் பாராட்டி மகிழ்ந்ததைக் கண்டு மக்கள் கூட்டம் நெருங்கி நின்று மச்சமாய் வந்து மாயமாய்க் குழந்தையான மாயவன் மயக்குவிழியில் மெய் மறந்து நின்று வல்லியின் உத்தரவுப்படி செயலாற்றக் காத்திருந் தது. வல்லி பல்லக்கினை வரவழைத்து அதில் ஆயிரம் கோடி காமர் அழகெலாம் திரண்டு ஒன்றுஞற் போன்ற குழந்தையை எடுத்து வருப்படி செய்தனள். மாலறுநேயம் மலிந்தவர் பல்லக்கினைச்

சுமந்தனர். பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பக்தர் குழாம் புடைசூழப் பரந்தாமனை வெண்மணற் பரப்பிலும், செடி, கொடி மத்தியிலும் சுமந்து சென்றனர்.

ஈரடியாலே மூவுலகளந்து நாற்றிசை முனிவரும் ஐம்புலன் மலரப் போற்றி செய்கதிர்முடித் திருநெடுமால் வல்லிக்கு அருள் செய்தது போதும் என்று திருவுளப்பாங்கு செய்தனனோ, பக்தகோடிகளுக்கு இன்னருள் பாலிக்க விரும்பினனோ, தன்னைத் துதித்தற்கேற்ற இடத்தை ஏனையோருக்குக் காட்ட நினைத்தனனோ, தன்னடியார் புகழ் பரப்பி ஆங்கவரை ஆளாக்க எண்ணினனோ யாரறிவார் அவன் ஆடலின் அருமையை. பல்லக்கின் பாரம் அடியொருகனமும் தூக்கொரு சுமையுமாக அதிகரித்தது. அடியார்கள் பல்லக்கினை மேலே கொண்டு செல்ல முயாது பாரமிகுதியினாலே கீழே இறக்கி வைத்துச் சிறிது களைப்பாறினர். அதன் பின்னர் பல்லக்கினை எவராலும் அசைத்துத் தூக்கமுடியாமற் போய்விட்டது. ஆயர் பாடியில் வேய்ங் குழல் ஊதி ஆநிரை காத்து அண்டசராசரங்களையும் அசையாது வேணுகான இசையில் மயங்கச் செய்த கண்ணனே வல்லியின் தவத் திற்கிரங்கிக் குழந்தையாக வந்தான் என்பதை அருகிருந்தோர் அனைவரும் உணரும்படியாக அவர்கள் தூக்கிவந்த பல்லக்கில் இருந்த பாலுருவாயோடு கூடிய அழகிய குழந்தையும் அந்தர்தானமாகி மறைந்தது. அடியார் அனைவரும் வல்லியின் அன்புப் பெருக்கினைப் பாராட்டி வல்லி இருந்த இடத்தை வல்லிபுரம் எனப் பெயரிட்டு அழைக்கலாயினர்.

## ஆழ்வார் ஆலயம்

திருமாலின் பக்தர்களை ஆழ்வார் என அழைப்பது சம்பிரதாயமானதாகும். வல்லிபுரத்தில் வழிபடுவதற்கென மூலஸ்தானத்தில் அமைந்து காணப்படுவது விட்டுணு மூர்த்தியின் கையில் காணப்படும் சக்கராயுதமாகும். வல்லியின் பக்திப் பெருமையை உலகறியச் செய்து குழந்தையாகக் காட்சி கொடுத்த திருமால் பல்லக்கிலிருந்து மறைந்ததும், அந்தணர் ஒருவர் அந்த இடத்திலே தோன்றி ஒரு சக்கரத்தை அங்கிருந்த பக்தர் ஒருவரிடம் கொடுத்து அதையே வைத்து வழிபாடியற்றிவருமாறு கூறிச்சென்றார். அந்தச் சக்கரம் வல்லிபுரம் என்னும் தலத்திலே கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் விட்டுணுவாலயத்தில் மூலத்தானத்தில் இன்றும் காணப்படுவதாகும்.

## சைவமுறைப்படி வழிபாடு

சக்கரம் விட்டுணுமூர்த்தியின் ஆயுதம் ஆயினும், விட்டுணு மூர்த்தியின் கட்டளைப்படி இயங்குவதனால் ஆழ்வார் ஆலயமாயிற்று. வல்லிபுரம் என்னும் கிராமத்திலும், அதனை அடுத்த ஊர்களிலும்

வசித்து வந்தவர்கள் சைவ அன்பர்கள் ஆனதனுலே வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் வழிபாடு செய்யும் போது, தமது வழமைப்படியாக ஆலும், குளமும், நெல்வயலும் சூழ எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமானுக்கு முதலில் வழிபாடு செய்து அதன் பின்னர் வல்லிபுர ஆழ்வாருக்குப் பூசை செய்து வரலாயினர்.

தற்போது வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திலேயே விநாயகர், நாகதம்பிரான், நாச்சிமார் ஆகியோருக்கு உட்பிரகாரத்திலே சந்நிதானங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. விநாயகர் பூசையை அடுத்துச் சங்கராழ்வார் பூசை நடைபெறுவது சைவ பாரம்பரிய முறைபற்றியாகும். வல்லிபுர ஆழ்வார் ஆலய பூசகர் அனைவரும் சைவக்குருக்கள் மரபில் வந்தவர்களே.

## தருமபரிபாலனசபை

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் தருமபரிபாலன சபையார் பல வகையிலும் ஆலயத்தின் மேம்பாட்டிற்கெனவே அயராது உழைத்து வருகின்றனர். திருப்பணி வேலைகள் நிறைவு பெற்று 1977-07-03ல் கும்பாபிஷேகம் அதிவிமரிசையாக நிகழ்ந்தது. மகா சபையினரும் மிகுந்த அக்கறை உடையவராயிருப்பது பாராட்டுக்கு உரியது.

## இராஜகோபுரத்திருப்பணி

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் சமுத்திரதேவனை நோக்கி மிக உன்னதமான இராஜகோபுரத்திருப்பணி வேலைகள் யாவும் விரைவில் நிறைவு பெறும் வகையில் அதிதீவிர வேகத்துடன் முன்னேறிக் கொண்டிருக்கிறது. இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் அன்பர்கள் இதய நிறைவுடன் வாரி வழங்கிய நிதியுதவியுடன் இராஜகோபுரத் திருப்பணிகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதனுல் வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்குச் சென்று வழிபாடியற்றியவர்கள் வானளாவ உயர்ந்து ஓங்கி நிற்கும் இராஜகோபுரத்தினைக்கண்டு விரைவில் நிறைவுறும் அத்திருப்பணிக்குத் தம்மாலான நிதியுதவி செய்த வண்ணமாயிருக்கின்றனர்.

ஈழவள நாட்டின் ஈடிணையற்ற செல்வச் செழிப்பினை எடுத்துக் காட்டும் இராஜகோபுரமாக வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் இராஜ கோபுரம் விளங்கும் என்பதில் இறும்பூதெய்துகிறேம்.

மகாசபை, தருமகர்த்தாச்சபை, திருப்பணிச்சபை முயற்சிகள் யாவும் மாயோன் அருளால் வெற்றிபெற அவன் அருளே துணை புரிவதாக எனத் திருமாலைப் போற்றி வழிபடுவோமாக.

உ

# வல்லிபுர அந்தாதிப் பதிகம்

பண்டிதர் பொன். சின்னத்துரை அவர்கள்

*மாதவா! வல்லிபுர மாயவா! மாசற்ற*
*மனந்தனில் மருவு மரசே!*
*மாதவம் செய்திலேன் மனிதரில் கடையனாய்*
*மயங்கிடச் செய்தல் முறையோ?*
*தீதகல வுன்னடிகள் சிந்திக்க வந்திக்கச்*
*சிறியனேன் வந்து சேர்ந்தேன்;*
*திருவரு ளருந்திடும் தாகமிக வந்துளேன்*
*தெய்வமே! சிறிது பாரும்;*
*பாதகம் வெய்யவினை செய்தோரும் பயபக்தி*
*படிந்தவுள் ளத்த ராகிப்*
*பலமுறை பணிந்தெழுந் துள்ளமெழு காயுருகிப்*
*பாடியே வலம்வ ருகிறார்.*
*காதலால் ''ஓம்நமோ நாராயணாயநம''*
*கருத்தொடே செபித்து நிற்பார்;*
*கண்ணனே! மணிவண்ண! கருதிடும் பொழுதெலாம்*
*காப்பதுன் கடமை; அருளே!*

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

இலவச வெளியீடு : குளோபல் கொம்யூனிக்கேசன்ஸ் லிமிற்றெட்

# யாழ்ப்பாணத்தில் I.D.D அதிசயம்!!

(I. D. D = International Direct Dialing)

அவுஸ்திரேலியா, அமெரிக்கா, பெல்ஜியம், கனடா, டென்மார்க், பிரான்ஸ், ஜேர்மனி, கிறீஸ், கொங்கொங், இத்தாலி, யப்பான், மலேசியா, நியூஸிலாந்து, நோர்வே, நெதர்லாந்து, சிங்கப்பூர், சுவீடன், சுவிற்சிலாந்து, சவூதி அரேபியா, இங்கிலாந்து

ஆகிய நாடுகளில் வசிக்கும் உங்கள் உறவினர்கள்
நண்பர்களோடு நொடிப் பொழுதில்
ரெலிபோன் மூலம் பேச முடியும்.

## யாழ்ப்பாணத்தில் TELEX

உலகில் எப்பகுதிக்கும்
நவீன **'ரெலெக்ஸ்'** இயந்திர மூலம்
உங்கள் அவசரச் செய்திகளை அனுப்பி
பதில் பெற விரும்புகிறீர்களா?
(சனி ஞாயிறு உட்பட தினமும் இரவு பகல் சேவை)

நாடுங்கள் :

## குளோபல்

## கொம்யூனிக்கேசன் லிமிற்றெட்

(யாழ்ப்பாணம் தபாற் கந்தோர் அருகாமையில்)

யாழ். கூட்டுறவு பன்முகப் பணிமனை,
127, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
ரெலிபோன் : 23015, 23249, 23313

" நவீன உலகில் நல்ல தொடர்புடையவர்கள் "

மெய்கண்டான், கொழும்பு.